357

# ORIGION AND DEVELOPMENT OFGRAFITTI MARKS OF ANCIENT PEOPLE OF KALKUDA DEVISION IN BATTICALOA

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
02 FEB 2015
VANTHARUMOOLAI,
CHENKALADY.

BY : SATHASIVAM DANURAJAN
REGISTRATION NUMBER: EU/IS/2008/AC/305
INDEX NUMBER : CS3705

DISSERTATION IS SUBMITTED FOR THE PARTICAL FULFILLMENT OF THE REQUIREMENT FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE FACALTY OF ARTS & CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA.

06 MAR 2015
EASTERN UNIVERSI...

FAC357
Project Report
Library - EUSL

DEPARMENT OF HISTORY
FACULTY OF ARTS AND CULTURE
EASTERN UNIVERSITY
SRI LANKA

2014

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் வரலாற்றுத் துறையின் சிறப்புக் கற்கை நெறியை நிறைவு செய்யும் பொருட்டு கல்குடாத் தொகுதியினை ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு பெருங்கற்கால பாவனைக் குறியீடுகளை அடையாளப்படுத்துவதாக இவ் ஆய்வு அமைகின்றது. ஒரு நாட்டினுடைய வரலாற்றைத் தீர்மானிப்பதில் அதன் அமைவிடத்திற்கும் முக்கியதொரு பங்குண்டு, இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இலங்கைக்கு பாரம்பரிய வரலாறு பண்பாடு என்பவற்றில் தனித்துவமான பண்புண்டு. தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டமைந்த நாடு என்ற வகையில் இலங்கைக்கு தனித்துவமான சிறப்புண்டு. இலங்கையினுடைய வரலாறு இந்திய வரலாற்று அம்சங்களோடு நெருங்கிய தொடர்புபட்டது.

தொல்லியல் பொருட்கள் தொடர்பக ஆரய்வதற்கும் அது தொடர்பாக அறிவதற்கும் முற்படுகின்ற வேளை அதனை வரையரை செய்து கொள்வது பொருத்தமானது. ஆயினும் சில சமயங்களில் ஆய்வு முயற்சியினுடைய பரப்பானது பரந்துபட்டதாகவும் காணப்படும். இவ் ஆய்வானது குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட தகவல்களை ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாகும். இதுவரை ஆய்வுகளை மேற்கொண்டிருந்த தொல்லியல் வரலாற்று அறிஞர்களான பாக்கர் (Parkar 1909) கொட்றிங்ரன் (Codrinton 1924) பேராசிரியர் பரணவிதான (Paranavithana 1970,1982) பேராசிரியர் பத்மநாதன் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் செல்வி க.தங்கேஸ்வரி வெல்லவூர் கோபால போன்ற சமூக ஆய்வாளர்களது ஆய்வுமுயற்சிகள் எமது ஆய்விற்கு முன்னோடியாக அமைகின்றன. அதன் அடிப்படையில் மட்டக்களப்பு கிழக்கு கல்குடா தொகுதியிலுள்ள தொல்லியல் சின்னங்களில் காணப்படுகின்ற பாவனைக் குறியீடுகளினை அடையாளப்படுத்தியுள்ளேன். இது பிற்கால ஆய்வுகளிற்கு ஒரு முன்னுதாரணமாகவும் வலுவூட்டுவதாகவும் காணப்படும் என நம்புகிறேன்.

அந்த வகையில் தொல்லியல் ஆய்வு என்றால் என்ன? அவற்றில் உள்ளடங்கும் பிரிவுகள் அவற்றின் மூலம் அறியப்படும் வரலாற்று செய்திகள் என்பற்றினூடாக எம்பிராந்தியத்திலுள்ள தொல்பொருளாய்வுகளில் கபணப்படும் குறியீடுகள் உணர்த்துகின்ற விளக்கங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இவ்வாய்வு அமைகின்றது.

தற்போதைய இவ்வாய்வானது மட்டக்களப்பில் கல்குடாத் தொகுதியினை அடிப்படையாகக் கொண்டது. அந்த வகையில் கோறளைப்பற்று ஏறாவூர் பற்றின் மேற்பகுதி என்பன இவற்றுள் அடங்குகின்றது. இதில் கோறளைப்பற்று மேற்கு கோறளைப்பற்று மத்தி என்பன வரலாற்று மூலாதாரங்கள் உள்ள பகுதிகளாக

அடையாளப்படுத்தப்படாதவை. இவை தவிர ஏனைய பகுதிகளை உள்ளடக்கிய வகையில் இவ்வாய்வு நடைபெறுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாறு பற்றி மட்டக்களப்பு மான்மியம் மட்டக்களப்பு பூர்வீக வரலாறு மட்டக்களப்பு தமிழகம் மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் கலிங்க மாகோன் வரலாறு மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் எஸ்.ஏ.கனகரதினத்தின் குறிப்புக்கள் முதலானவைகள் குறிப்பிடுகின்றன.

மட்டக்களப்பு வடபகுதி பற்றி தங்கேஸ்வரி அவர்களினால் எழுதப்பட்ட கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு கிழக்கிலங்கை வழிபாட்டு பாரம்பரியங்கள் வாகரை வாணனின் கிழக்கில் ஓர் கிராமம் கிழக்கிலங்கைத் தமிழகம் மற்றும் காலத்திற்கு காலம் வெளிவந்த வரலாற்றாய்வாளர்களின் கட்டுரைத் தொகுப்புகளுமே ஆதாரமாய் உள்ளன.

இலக்கிய குறிப்புக்களைவிட அவற்றை ஒட்டி தொல்லியலாதாரங்கள் கிடைக்கப்பெறுவது இப்பிரதேசத்தினுடைய தொன்மையினைக் காட்டுகிறது. இங்கு பூர்வீகக் குடிகள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறுவது தொல்லியலாதாரங்களான கல்லோடுகள் நாணயங்கள் தூண்கள் கல்வெட்டுக்கள் ஆலயங்கள் ஓலைச்சுவடிகள் என்பவற்றின் ஊடாகவும் பண்பாட்டுக் கோலங்களின் அடிப்படையிலும் குறியீடுகளின் செல்வாக்கினை அறிய முடிகின்றது.

இப்பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களை மையப்படுத்தி அத்தகவல்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரதேசமானது இப்பிரதேசங்களானது ஏதோ ஒரு வகையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பகுதிகளை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பகுதிகளில் ஆய்வு முயற்சிகள் அவசியமான ஒன்றாக உள்ளது.

தோல்பொருட் சின்னங்கள் பிராமிச் சாசனங்கள் நாணயங்கள் ஆலயங்கள் கால்நடைகள் சலவைத் தொழிலாளர்கள் பிற சான்றுகள் போன்ற பல்வேறுபட்ட அம்சங்களின் ஊடாக இப்பிரதேசத்திலே ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும் அவை வெளிப்படுத்தும் கருத்துருவாக்கத்தை அறிய முடிகின்றது. ஆயினும் இவை இக்காலத்தில் மிகக் குறைவடைந்து வருவதைக் காணமுடிகின்றமை காரணமாக இம்முயற்சியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| விடயம் | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | i - ii |
| நன்றியுரை | iii |
| பொருளடக்கம் | iv - vi |

**அத்தியாயம் ஒன்று**

| | |
| --- | --- |
| 1.0ஆய்வின் நோக்கம் | 01-15 |
| 1.1 ஆய்வின் கருதுகோள் | |
| 1.2 ஆய்வுப் பிரதேசம் பற்றிய வரலாற்றுப் பின்னனி | |
| 1.3 ஆய்வுப் பரப்பும் காலமும் | |
| 1.4 முன்னைய ஆய்வுகள் | |
| 1.5 ஆய்வு அணுகுமுறை | |
| 1.6 ஆய்வு மூலங்கள் | |
| 1.7 எதிர் நோக்கிய பிரச்சினைகள் | |

**அத்தியாயம் இரண்டு**

| | |
| --- | --- |
| 2.0 இலங்கையின் வரலாற்றுப் பின்னணி | 16-34 |
| 2.1 தென்னாசிய நாடுகளில் இலங்கையின் அமைவிடம் | |
| 2.2 பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கியத்துவம் | |
| 2.3 குறியீடுகளின் தோற்றமும் தொடர்ச்சியும் | |
| 2.4 குறியீடுகள் பற்றிய ஆய்வு | |

## அத்தியாயம் மூன்று

3.0 குறியீடுகளின் வரலாற்று முக்கியத்துவம் 35-66

3.1 இலங்கையில் குறியீடுகளும் குறியீடுகள் காணப்பட்ட

தொல்லியல் மையங்களும்

3.1.0 இலங்கையில் பெருங்கற்கால மையங்கள்

3.1.1 பெருங்கற்காலக் குறியீடுகள்

3.1.2 இலங்கையில் பெருங்கற்காலக் குறியீடுகள் உள்ள இடங்கள்

3.2 குறியீடுகள் உணர்த்தும் பொருள்கள்

3.2.0 ஈழ-தமிழக பிராமி வாசகங்களுடன் கூடிய குறியீடுகள்

3.3 இலங்கை தென்னிந்திய குறியீடுகள் இடையே காணப்படும் ஒற்றுமைகள்.

3.3.0 தென்னிந்தியாவில் குறியீடுள்ள இடங்கள்.

3.3.1 இலங்கை தென்னிந்தியக் குறியீடுகளில் காணப்படும் ஒற்றுமைகள்.

## அத்தியாயம் நான்கு

4.0 ஆய்வுப் பிரதேசமும் பெருங்கற்காலப் பண்பாடும் 67-83

4.1 ஆய்வுப் பிரதேசத்தில் கண்டறியப்பட்ட குறியீடுகள்

4.2 ஆய்வுப் பிரதேசத்தில் குறியீடுகள் தொடர்பான

ஐதீகங்கள் நம்பிக்கை மரபுகள்

4.3 ஆய்வுப் பிரதேசம் தொடர்பான வெளியீடுகள்

அத்தியாயம் ஐந்து

5.0ஆய்வுப் பிரதேசத்தில் குறியீடுகளின் சமகாலச் செல்வாக்கு 84-106

5.1 கல்வெட்டுக்கள், செப்பேடுகள்

5.2 நாணயம்

5.3 ஆடைகள்

5.4 மட்பாண்டங்கள்

5.5 பிரசான்றுகள்

5.6 கால்நடைகள்

5.7 ஆலயங்கள்